தேதி: 12-04-2022

O.S. No. 829/2015

வா.சா.2 திரு.வேலுச்சாமி

சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

குறுக்கு விசாரணை:

வாதி, பிரதிவாதியை எனக்கு தெரியும். வாதி ஆணைப்பட்டி ஊரைச் சேர்ந்தவர். பிரதிவாதி கொடைக்கானலை சேர்ந்தவர். வழக்கு சொத்தானது கொடைக்கானல் குறிஞ்சியாண்டவர் கோயில் அருகில் உள்ளது. வழக்கு சொத்தின் சர்வே எண். 18. 19.01.2012 தேதியில் ஸ்ரீசெந்தில் ஆண்டவர் ஆட்டோ பைனான்ஸ், கற்பகம் கிரிடிட்ஸ், விஜயதேவி எண்டர்பிரைசஸ் மற்றும் பிரதிவாதி ஆகியோர் கிரையம் வாங்கினார்கள் என்றால் சரி. அதே தேதியில் பிரதிவாதியிடம் நான் அதிகார ஆவணம் வாங்கினேன். அதிகார ஆவணத்தை நீங்கள் கம்பெனிக்கு ஆதரவாக எழுதி வாங்கியுள்ளீர்கள் என்றால் சரியல்ல. வாதி உங்களுடன் சேர்ந்து மேற்கண்ட நிறுவனங்களில் கூட்டாளியாக உள்ளார் என்றால் இல்லை. வழக்கிற்காக பொய்யாக வழக்கு சொத்தின் அதிகார முகவர் என்று சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. வாதிக்கு கிரையம் செய்து கொடுத்ததை பிரதிவாதியின் குடும்பத்தினருக்கு தெரிவித்தீர்களா என்றால் தெரிவித்தேன். பிரதிவாதியின் குடும்பம் எனக்கு அதிகார ஆவணம் வழங்கும்போதே அதே முகவரியில் தான் வசித்து வருகிறார்கள். 70 லட்ச ரூபாய் மேற்கண்ட நிறுவனங்களில் இருந்து பிரதிவாதி குடும்பத்தினர் கடன் வாங்கி அதை திருப்பி செலுத்திவிட்டார்கள், வட்டியில் தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. கொடைக்கானல் காவல் நிலையத்தில் வாதி மீதும், உங்கள் மீதும் புகார் அளித்து நிலுவையில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு சொத்தை வாடகைக்கு விட்டதாக சொல்லியுள்ளீர்கள் எந்த தேதியில் எப்போது வாடகைக்கு விட்டீர்கள் என்றால் 09.09.2014-ம் தேதியில் கொடைக்கானல் லாட்ஜ் ரூமில் வைத்து மாதம் ரூ.25000/- வாடகைக்கு விடுவதாக பேசினோம். ஒப்பந்தம் ஏற்படுத்தவில்லை. பிரதிவாதியிடம் வாடகை கேட்டு நீங்கள் சென்றீர்களா என்றால் நான் செல்லவில்லை. வாதி உங்களின் கூட்டாளி, வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. வாதிக்கு கிரையத் தொகையாக ரூ.10160000/- கொடுத்தேன். பிரதிவாதி குடும்பத்தினருக்கு கணக்கை தெரியப்படுத்தி தொகையும் கொடுத்தேன். பத்திரத்தில் அது எழுதப்பட்டுள்ளது. வழக்கு சொத்தின் மதிப்பு கிரைய காலத்தில் 3.5 கோடிக்கு மேல் இருந்தது, வழக்கிற்காக ஒரு கோடி

என்று பொய்யாக சொல்கிறீர்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதியிடமிருந்து சொத்தை அபகரிக்கவேண்டும் என்பதற்காக வாதியுடன் கூட்டு சேர்ந்து கிரைய ஆவணங்கள் உற்பத்தி செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

K HARIHARAN Digitally signed by K HARIHARAN Date: 2022.04.13 10:04:01 +0530

**முதன்மை சார்பு நீதிபதி,**
**பழனி.**